1975 ஏப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலைவரவர்களே, நான் ஏதோ அவதூறு வீசியதாகச் சொன்னார். அது அவதூறு அல்ல, உண்மை நிலையை எடுத்துச் சொன்னேன்.

நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியதைத் தாங்கள் ஆராய்ந்து, இந்த அவைக்கு முடிவுகளை வெளியிடுவது மிக சிலாக்கியமாக இருக்கும். அப்படி ஆராய்கிற நேரத்தில், ஒரு நேரத்தில், பேரவைத் தலைவர், அல்லது துணைத் தலைவர் இருந்து தீர்ப்புகளை வழங்கிவிட்டு, பிறகு கொள்கையின் காரணமாக வேறு கட்சிக்குச் செல்கிற காரணத்தால், முன்னுல் அந்தப் பொறுப்பு நிறைவேற்றப் பட காரணம் நான் அல்ல, சில பேர் என்னைத் தூண்டி விட்டார்கள், ஆகவே, நான் செய்தேன் என்றெல்லாம் கூறுவதும் நியாயமா என்பதைத் தாங்கள் ஆராய்ந்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தெரிவித்த அருமையான ஆலோசனைக்கு தாங்கள் ஒரு நல்ல பதிலைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : பத்திரிகையில் வந்ததைப் பாருங்கள். அன்றைக்கு முதலமைச்சர் சொன்னதை நான் (குறுக்கீடு) அவர் எந்த அதிகாரத்தில் அதைச் சொன்னார்.

He almost irritated me

என் மேல் ரிமூவல் மோஷன் ஒரு முறைக்கு இரண்டு முறை வந்தது. இரண்டாவது முறை ஆளுங்கட்சியால் கொண்டு வரப்பட்டது. அது மெஜாரிட்டி கட்சியால் நிறை வேற்றப்பட்டது. இப்பொழுது எழும்பியுள்ள விவகாரத்தை முதலமைச்சரோ மற்றவர்களோ பேசியிருக்கலாம். அன்றைக்கு அவர்கள் பேசவில்லை. ஆனுல் இப்பொழுது, இதற்கு முன்னுலே நான் பொறுப்பிலே இருந்ததைப் பற்றி, அப்பொழுது நான் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி, இவ்வாறு சொல்வது, சட்டப்படி சரியா ? நியாயப்படி சரியா? மனிதாபிமானப்படி சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஒன்றை எழுப்பி இருக்கிறீர்கள். அதைத் தீர ஆராய்ந்து, பிறகு தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) பேரவைத் தலைவர் அனுமதியில்லாமல் உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசுவதை பத்திரிகையில் வெளியிடலாமா என்பது குறித்து.

திரு. நா. வீராசாமி : இது வேறு பாயின்ட் ஆப் ஆர்டர். பொதுவாக, இந்த மன்றத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சிகள் அத்தனையும் குறிப்புக்களிலே ஏறுகின்றன. அவைகளைத்தான்

பேரவைத் தலைவர் அனுமதியில்லாமல் உறுப்பினர்கள்
உட்கார்ந்து கொண்டே பேசுவதை பத்திரிகையில்
வெளியிடலாமா என்பது குறித்து

[திரு. நா. வீராசாமி] [1975 ஏப்ரல் 16

பத்திரிகைகளிலே வெளியிட வேண்டுமென்று நீங்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் உட்கார்ந்து கொண்டு பேசியவை சில பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. அப்படி, சட்ட மன்றத்திலே அவைத் தலைவருடைய அனுமதி பெறாமல் ஒரு உறுப்பினர் ஓரிடத்திலேயிருந்து பேசுவதெல்லாம் பத்திரிகையிலே வர ஆரம்பித்தால், அதற்குப் பின்னாலே இந்த மன்றத்தைப் பற்றி, உறுப்பினர்களைப் பற்றி அத்தனை பேர்களையும் பற்றித் தவறான தகவல் வரக்கூடும். (திரு. பெ. சீனிவாசன் குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பாய்ண்ட் ஆப் ஆர்டர் முடியட்டும். பிறகு விளக்கம் சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி: இப்படி பத்திரிகையிலே வருவதாலே இந்த மன்றத்தைப் பற்றியும் தவறாக, மிகக் கேவலமாக மக்கள் நினைக்கக் கூடிய நிலைமை உருவாகும். அப்படி நிலைமைகள் உருவாவது முறைதானா? பத்திரிகையிலே அப்படிப்பட்ட செய்திகள் வருவது நியாயம்தானா? இதற்குத் தலைவரவர்கள் என்ன பாதுகாப்புக் கொடுக்கப் போகிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: ஒரு பத்திரிகையிலே வந்தததை நான் கூடப் பார்த்தேன். நான் எழுந்துதான் சொன்னேன், உட்கார்ந்துக் கொண்டு சொல்லவில்லை.......

திரு. நா. வீராசாமி: அது சபைக் குறிப்பிலே ஏறவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: சபைக்குறிப்பிலே ஏறவில்லையென்பது எப்படி எங்களுக்குத் தெரியும்? இங்கு என்ன, ஸ்கிரீனிலே வருகிறதா, இவையெல்லாம் ஏறியுள்ளது, இவையெல்லாம் ஏறவில்லையென்று. (மணியடிக்கப்பட்டது.) என்னைப் பற்றி இப்படி சில வேளை வீராசாமி எழுப்புகிறார். முந்தையநாள் தமிழ்நாட்டிலே மாதவனுக்குச் சொந்தமான ஒரு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறதென்று..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது, பொதுவாக, நம்முடைய மன்றத்திலே சில காலமாக உறுப்பினர்கள் உட்கார்ந்த இடத்திலே இருந்து, சில சொற்களைச் சொல்கிறார்கள். அது மன்றத்திலே சொல்லக் கூடாத சொற்கள். அப்படிப்பட்ட சொற்களுக்கெல்லாம் சில பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுப்பதை நான் கூடப் பார்க்கிறேன். பார்லிமெண்டரி மார்க்ஸ்ஸுக்கு ஒரு 'காலம்' செய்தி கொடுக்கப்படுகிற நிகழ்ச்சி கூட வருகிறது. நான் பத்திரிகைகளைப் பணிவோடு கேட்டுக்

கொள்கிறேன், மன்றத்தினுடைய மரபுகளை, பெருமைகளைக் காப்பாற்றுகிற அளவுக்குச் செய்திகளை வெளியிடுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாய்ண்ட் ஆஃப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று இரண்டு பில்கள்தான் பாஸ் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு, நேற்றைய இரண்டு பில்களே இருக்கின்றன. இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எல்லாம் இழுத்துக் கொண்டு போய், 11 மணிக்கு 12 மணிக்குப் 'பில்'லை எடுத்து, உறுப்பினர்கள் பேசமுடியாமல், பில்லை அவசரஅவசரமாக பாஸ் பண்ண வேண்டிய நிலைமை வருகிறது. நான் காலையிலே, கேள்வி நேரத்தை விட்டுவிட்டு, பில்லை எடுத்துக் கொள்ளலாம் என்று கூட நினைத்தேன். அப்படியிருக்கும்போது தேவையில்லாமல், பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி நேரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பாய்ண்ட் ஆஃப் ஆர்டருக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். அப்படியில்லையென்று சொன்னால், தாங்கள் அனுமதிக்காமலிருக்கலாம். மற்ற எல்லோருக்கும் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப அனுமதி கொடுக்கிறீர்கள். நாங்கள் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னப்ப நாடார் எழுப்பியது பற்றி, பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் மறுக்கப்படவில்லை. எவ்வளவு கேட்டாலும் நான் வாய்ப்பு கொடுக்கிறேன். இது எங்கெங்கோ போகிறதே என்றுதான் மறுக்கிறேன்.

(இ) பஞ்சாப் மாநில முதல்வர், தமிழக முதல்வர் வட எல்லையை வந்து பார்க்க அழைப்பு விடுத்திருப்பது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பு மொரார்ஜி தேசாய் அவர்கள்—(குறுக்கீடு) இது ரொம்ப முக்கியமான விஷயம். கொஞ்சம் சொல்வதைக் கேளுங்கள்—இரண்டு பிரச்னைகளுக்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒன்று குஜராத்—அதை விட்டுவிடுவோம். இன்னொன்று, இந்த நாட்டிலே இருக்கிற அவசரச் சட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டுமென்ற ஒரு முக்கியமான கோரிக்கையைக்கூட வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒரு விதத்திலே சமரசம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அவசரச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் பிரதம அமைச்சரவர்களும், எதிர்க்கட்சிகளும் கலந்து ஆலோசித்து அதற்கு ஒரு முடிவு செய்யலாம் என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.